சுருக்கம்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – முதலமைச்சர் பொது நிவாரண நிதி – கோவிட் 19 – மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகுகள் – கொரோனா நோய் தடுப்புப் பணியின் போது கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டு உயிரிழந்த திருவாளர்கள். ஜெ.மௌனதாஸ், மற்றும் கு.இராஜேந்திரன் ஆகிய இரண்டு தூய்மை பணியாளர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து நிவாரண உதவியாக தலா ரூ.25,00,000/– வீதம் மொத்தம் ரூ.50,00,000/– நிதி ஒப்பளிப்பு செய்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மஅதி.1) துறை**

**அரசாணை (1ப) எண்.289**

**நாள்:14.12.2021**
**பிலவ வருடம், கார்த்திகை 28.**
**திருவள்ளுவர் ஆண்டு 2052**

**படிக்கப்பட்டவை:**

1. மாண்புமிகு முதலமைச்சரின் செய்திக் குறிப்பு எண்.48, நாள் 22.04.2020.
2. அரசு கடித (1டி) எண்.16238/பே.மே.1(1)/2020–1, வருவாய் நிருவாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை (பே.மே.1) துறை, நாள்:10.08.2020
3. அரசு கடித (1டி) எண்.93, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை (பே.மே.1) துறை, நாள் 04.06.2021.
4. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடித ந.க.எண்.29034/2021/எப்.2, நாள்: 10.07.2021.

******

**ஆணை:–**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட மாண்புமிகு முதலமைச்சரின் அறிவிப்பில், அரசுத் துறைகளான மருத்துவத் துறை, காவல்துறை, உள்ளாட்சித் துறை மற்றும் தூய்மை பணியாளர்கள் உள்ளிட்ட அனைத்து துறை பணியாளர்களுக்கும் கொரோனா நோய்த் தடுப்புப் பணியில் ஈடுபட்டு, நோய்த் தொற்றுக்கு உள்ளாகி உயிரிழக்க நேரிட்டால் அவர்களது குடும்பத்திற்கு நிவாரண உதவி வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

2) மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசு கடிதத்தில் கொரோனா தடுப்புப் பணியின் போது உயிரிழக்கும் முன்கள அரசுப் பணியாளர்கள் / உள்ளாட்சி

அலுவலர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து நிதி வழங்குவதற்கான வரையறைகள் வகுக்கப்பட்டுள்ளது.

3) மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், வருவாய் நிருவாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆணையரகத்திற்கு கருத்துரு அனுப்ப வேண்டும் என்ற நடைமுறையினை மாற்றி சம்மந்தப்பட்ட அரசின் நிருவாகத் துறைக்கே முன்மொழிவினை முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து நிதி பெற்று தருவதற்கு அனுப்பிடுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

4) மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகுகளில் கொரோனா நோய் தடுப்புப் பணியில் ஈடுபட்டு உயிரிழந்த திருவாளர்கள். ஜெ.மௌனதாஸ், தூய்மை காவலர், வில்லியவரம்பல் ஊராட்சி, திருவிடைமருதூர் ஊராட்சி ஒன்றியம், தஞ்சாவூர் மாவட்டம் மற்றும் கு.இராஜேந்திரன், தூய்மைக் காவலர், மகாராஜபுரம் ஊராட்சி, வத்திராயிருப்பு ஊராட்சி ஒன்றியம், விருதுநகர் மாவட்டம் ஆகிய இரண்டு தூய்மை காவலர்களின் குடும்பங்களுக்கு அரசால் வழங்கப்படும் முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து நிதி பெற்று தருவதற்கு தஞ்சாவூர் மற்றும் விருதுநகர் மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து பெறப்பட்டுள்ள முன்மொழிவுகளை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அரசுக்குப் பரிந்துரை செய்துள்ளார்.

5) ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலித்தது. உரிய பரிசீலனைக்குப் பின் கொரோனா நோய்த் தடுப்புப் பணியில் ஈடுபட்டு, கொரோனா பாதிப்பினால் உயிரிழந்த கீழ்க்காணும் இரண்டு தூய்மை காவலர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து நிவாரண உதவியாக தலா ரூ.25,00,000/– (ரூபாய் இருபத்தைந்து இலட்சம் மட்டும்) வீதம் மொத்தம் ரூ.50,00,000/– (ரூபாய் ஐம்பது இலட்சம் மட்டும்) நிதியுதவி ஒப்பளிப்பு செய்து அவ்வாறே அரசு ஆணையிடுகிறது:–

| வ. எண் | பெயர் மற்றும் பதவி | இறந்த நாள் | பணிபுரிந்த இடம் மற்றும் மாவட்டம் |
|---|---|---|---|
| 1. | திரு.ஜெ.மௌனதாஸ், தூய்மை காவலர், | 13.05.2021. | வில்லியவரம்பல் ஊராட்சி, திருவிடைமருதூர் ஊராட்சி ஒன்றியம், தஞ்சாவூர் மாவட்டம் |
| 2. | திரு.கு.இராஜேந்திரன், தூய்மை காவலர், | 30.07.2020 | மகாராஜபுரம் ஊராட்சி, வத்திராயிருப்பு ஊராட்சி ஒன்றியம், விருதுநகர் மாவட்டம் |

6) மேலே பத்தி 5–ல் ஒப்பளிக்கப்பட்டுள்ள மொத்த தொகையான ரூ.50,00,000/– (ரூபாய் ஐம்பது இலட்சம் மட்டும்)–த்தில் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவரின் பெயரில் (வ.எண்.1) ரூ.25,00,000/– (ரூபாய் இருபத்தைந்து இலட்சம் மட்டும்) மற்றும் விருதுநகர்

மாவட்ட ஆட்சித் தலைவரின் பெயரில் (வ. எண்.2) ரூ.25,00,000/– (ரூபாய் இருபத்தைந்து இலட்சம் மட்டும்)–க்கான காசோலையை முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து அனுப்பி வைக்குமாறு அரசு இணைச் செயலாளர் மற்றும் பொருளாளர், நிதி (முதலமைச்சர் பொது நிவாரண நிதி)த் துறை, சென்னை–600 009 அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7) மேலே பத்தி 5–ல் ஒப்பளிக்கப்பட்ட நிவாரண தொகையை உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு காசோலை மூலமாகவோ அல்லது அஞ்சலக சேமிப்பு வங்கிக் கணக்கு மூலமாகவோ உரிய நடைமுறை விதிகளின்படி வழங்கி, நிவாரணத் தொகை பயனாளிகளுக்கு முழுமையாகப் போய்ச் சேரும் வகையில் செயல்பட்டு, அவர்களிடமிருந்து வரிவில்லையிட்ட அசல் பற்றுச் சீட்டினைப் பெற்று அதில் வட்டார வளர்ச்சி அலுவலர் பதவிக்குக் குறையாத அலுவலரின் சான்றொப்பத்துடனும் உரிய அலுவலக முத்திரையுடனும் அரசு இணைச் செயலாளர் மற்றும் பொருளாளர், நிதி (முதலமைச்சர் பொது நிவாரண நிதி)த் துறை, சென்னை–600009 அவர்களுக்கும், அதன் நகலினை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறைக்கும் அனுப்பி வைக்குமாறு தஞ்சாவூர் மற்றும் விருதுநகர் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

8)இவ்வாணை நிதித் துறையின் அலுவல் சார்பற்ற எண்.54581/ நிதி(முபொநிதி)/2021, நாள் 08.12.2021ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

பெ. அமுதா,
**அரசு முதன்மைச் செயலாளர்**

பெறுநர்
அரசு இணைச் செயலாளர் மற்றும் பொருளாளர்,
நிதி (முதலமைச்சர் பொது நிவாரண நிதி)த் துறை,
சென்னை – 9 ( 3 படிகள்)
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை –15
மாவட்ட ஆட்சித் தலைவர்கள்,
தஞ்சாவூர் மாவட்டம் மற்றும் விருதுநகர் மாவட்டம்.

**நகல்**
முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 9
ஊரக வளர்ச்சித் துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை –9.
தனி அலுவலர், முதல்மைச்சரின் தனிப் பிரிவு, சென்னை – 9.
நிதி (முதலமைச்சர் பொது நிவாரண நிதி)த் துறை, சென்னை – 9.
இருப்புக் கோப்பு / உதிரி

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

**பிரிவு அலுவலர்.**